**பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 181**

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்**
**பத்தாவது பாராளுமன்றம்**
**(முதலாவது அமர்வு)**

# அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் முதலாவது அறிக்கை

**அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் தவிசாளர்**
**பாரளுமன்ற உறுப்பினர் கௌரவ (வைத்தியர்) நிஷாந்த சமரவீர அவர்களால்**
**2025 ஏப்ரல் 08 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.**

*2025 ஏப்ரல் மாதம் 8 ஆந் திகதி இலங்கை*
*பாராளுமன்றத்தால் அச்சிட உத்தரவிடப்பட்டது.*

**அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு**

**பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு**

2025 சனவரி 09 ஆந் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களால் வெளியிட்ட அறிவிப்பின்படி பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 120(1) இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 டிசம்பர் 06 ஆந் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட முன்மொழிவுகளின்படி, தெரிவுக் குழுவினால் பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்விற்காக அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவிற்காக பின்வரும் பதினைந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

1. கௌரவ (வைத்தியர்) திரு. நிஷாந்த சமரவீர, பா.உ., (தவிசாளர்)
2. கௌரவ திரு. எம்.கே.எம். அஸ்லம், பா.உ.,
3. கௌரவ திருமதி. சமன்மலி குணசிங்ஹ, பா.உ.,
4. கௌரவ திரு. கோசல நுவன் ஜயவீர, பா.உ.,
5. கௌரவ திரு. சுஜீவ திசாநாயக்க, பா.உ.,
6. கௌரவ சுதத் பலகல்ல, பா.உ.,
7. கௌரவ (டாக்டர்) திரு. எஸ். திரு. ஸ்ரீ பவானந்தராஜா, பா.உ.,
8. கௌரவ திரு. ஜகத் மனுவர்ண, பா.உ.,
9. கௌரவ திரு. ருவன் மாபலகம, பா.உ.,
10. கௌரவ திரு. சுனில் ராஜபக்ஷ, பா.உ.,
11. கௌரவ திரு. தர்மப்பிரிய விஜேசிங்ஹ, பா.உ.,
12. கௌரவ திரு. அசித நிரோஷன எகொட விதான, பா.உ.,
13. கௌரவ திரு. திலிண சமரகோன், பா.உ.,
14. கௌரவ திரு. சந்திம ஹெட்டிஆரச்சி, பா.உ.,
15. கௌரவ (சட்டத்தரணி) திருமதி. லக்மாலி ஹேமச்சந்திர, பா.உ.,

2025 சனவரி 09 ஆந் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களால் வெளியிட்ட அறிவிப்பின்படி பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 120(1) இன் ஏற்பாடுகள் மற்றும் 2025 மார்ச் 19 ஆந் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட முன்மொழிவுகளின்படி, தெரிவுக் குழுவினால் பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்விற்காக அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவிற்காக பின்வரும் பன்னிரெண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

1. கௌரவ திரு. மனோ கணேசன், பா.உ.,
2. கௌரவ (சட்டத்தரணி) திரு. அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ, பா.உ.,
3. கௌரவ திரு. டீ.வீ. சானக்க, பா.உ.,
4. கௌரவ (சட்டத்தரணி) திரு. அனுராத ஜயரத்ன, பா.உ.,
5. கௌரவ திரு. நளின் பண்டார ஜயமஹ, பா.உ.,
6. கௌரவ திரு. எஸ்.எம். மரிக்கார், பா.உ.,
7. கௌரவ திரு. சமிந்த விஜேசிறி, பா.உ.,
8. கௌரவ (சட்டத்தரணி) திருமதி. நிலந்தி கொட்டஹச்சி, பா.உ.,
9. கௌரவ திரு. திலித் ஜயவீர, பா.உ.,
10. கௌரவ லெப்டினன்ட் கமாண்டர் (ஓய்வு) திரு. பிரகீத் மதுரங்க, பா.உ.,
11. கௌரவ (வைத்தியர்) திரு. பத்மநாதன் சத்தியலிங்கம், பா.உ.,
12. கௌரவ திரு. தினேஷ் ஹேமந்த, பா.உ.,

**<u>குழு செயலகத்தின் பதவியணியினர்</u>**

அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் தற்போதைய பதவியணியினர்கள் பின்வருமாறு.

| | |
|---|---|
| உதவி பணிப்பாளர் (நிர்வாகம்) | - செல்வி. ஹிமாலி சமரதிவாகர |
| பிரதான உத்தியோகத்தர் | - திருமதி. எச்.ஆர்.த சொய்சா |
| பிரதி பிரதான உத்தியோகத்தர் | - திரு. எஸ். எல். விக்கிரம |
| பாராளுமன்ற உத்தியோகத்தர் | - திருமதி. ஜீ.வீ.எஸ்.கே. குமாரி |

பாராளுமன்ற உத்தியோகத்தர் - திருமதி. ஐ.எஸ். கோமஸ்

பாராளுமன்ற உத்தியோகத்தர் - திருமதி. ஜி. எல். டீ. பிரனாந்து

**<u>குழு அறிக்கைகள்</u>**

www.parliament.lk என்ற வலைத்தளத்திலிருந்து பின்வரும் இணைப்பு வழியாக அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் அறிக்கைகளை தரவிறக்கம் செய்ய முடியும;.

www.parliament.lk

↓

தமிழ்

↓

பாராளுமன்ற அலுவல்கள்

↓

குழு

↓

குழுவின் அறிக்கை

**உள்ளடக்கம்**


| | | பக்க இலக்கம் |
|---|---|---|
| 1 | தவிசாளரின் குறிப்பு | v |
| 2 | பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வின் அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் முதலாவது அறிக்கை | vii |
| 3 | நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் | 1 |
| 4 | அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் மூலம் விசாரணை செய்யப்பட்ட நிறுவனம் - தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை | 3 |
| 5 | இணைப்பு | 42 |

**<u>தவிசாளரின் குறிப்பு</u>**

பாராளுமன்றத்தின் விசேட பணிகளுக்கான குழுக்களின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு 2025.03.12 மற்றும் 2025.03.26 ஆகிய திகதிகளில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் உள்ள தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள், விசேட அறிக்கைகள் மற்றும் அதன் தற்போதைய செயலாற்றல் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையின் அறிக்கையை இதன் மூலம் சமர்ப்பிக்கிறேன்.

மருந்துகள் மற்றும் சுகாதாரப் பொருட்களின் தரம், பாதுகாப்பு மற்றும் செயற்திறனை உறுதி செய்வதற்காக நோயாளிகளின் நலனுக்காக ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை மற்றும் சான்றுகள் சார்ந்த முடிவுகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட இந்த நிறுவனம், பொதுமக்களுக்கு பயனுள்ள, பாதுகாப்பான மற்றும் துல்லியமான மருந்துகள், மருத்துவ சாதனங்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட தயாரிப்புகளை நியாயமான விலையில் வழங்குவதற்கான அதன் முக்கிய நோக்கத்தை எந்த அளவிற்கு முறையாக அமுல்படுத்தியுள்ளது என்பதை இந்த விசாரணையில் ஆய்வு செய்யப்பட்டது.

கடந்த சில ஆண்டுகளாக சமூகத்திற்கு பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கி வரும் இந்த நிறுவனம் 2015 இன் 15 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபைச் சட்டத்தின் கீழ் அதன் அதிகார சபையின் எல்லைக்கு வெளியே செயல்பட்டு, உருவாக்கப்பட்ட பிரச்சினைகள் குறித்து சட்டமன்ற உறுப்பினர்களாக பாராளுமன்றம் கவனம் செலுத்துவது மிகவும் முக்கியமானது.

இந்த அறிக்கையில் குழு கவனம் செலுத்திய பிரச்சினைகளில், மருந்துகளின் தரம், மருந்து இறக்குமதிகளைப் பதிவு செய்யும் போது பதிவு விலக்கு (WOR) கடிதங்களை மோசடியாக வழங்குதல் (Waiver of registration - WOR) இமற்றும் சிறப்பு பதிவு முறையை (Special Pathway) ஏற்றுக்கொள்வது ஆகியவற்றில் குறிப்பாக கவனம் செலுத்தப்பட்டது.

இதற்கு மேலதிகதாக, e-NMRA தானியங்கி தரவு அமைப்பு மற்றும் இம்யூனோகுளோபியுலின் போன்ற தரமற்ற மருந்துகளின் இறக்குமதி ஆகியவற்றிலும் குழு விசேட கவனம் செலுத்தியது.

அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் விசாரணைகளிலிருந்து நாட்டிற்கு அதிகபட்ச சேவை, தெரிவுக்குழுவால் வழங்கப்படுகிறது, இதன் மூலம் இந்தக் குழுவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து பின்தொடர்வது, அனைத்துப் பொறுப்பான தரப்பினரின் கவனத்தையும் அவற்றிற்கு ஈர்ப்பது மற்றும் அவற்றை செயல்படுத்துவதன் மூலம் வழங்கப்படுகிறது. நாட்டின் இறையாண்மை கொண்ட மக்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் இந்த கௌரவ குழுவின் பங்கிற்கு ஏற்ப, இங்கு முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை செயல்படுத்தவும், இந்த பரிந்துரைகளை மிகவும் திறம்பட செயல்படுத்தவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வோம் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக, குழுவின் உறுப்பினர்கள், சபாநாயகர், பிரதான பாராளுமன்ற ஊழியர்கள், திறைசேரி உத்தியோகத்தர்கள் மற்றும் குறிப்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி, தேசிய கணக்காய்வு அலுவலகம் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட ஒத்துழைப்பை நான் பாராட்டுகிறேன்.

வைத்தியர் நிஷாந்த சமரவீர
தவிசாளர்
அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு

**பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு**
**அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் முதலாவது அறிக்கை**

அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு, பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வின் முதலாவது அறிக்கையை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது.

சகல அரச கூட்டுத்தாபனங்களும், எந்தவொரு எழுத்துப்பூர்வ சட்டத்தின் கீழும் அரசாங்கத்திற்கு மாற்றப்பட்ட பொது முயற்சிகள், ஏனைய வணிகங்கள் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படும் நிறுவனங்கள் மற்றும் ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை அரசாங்கம் அல்லது ஒரு பொதுக் கூட்டுத்தாபனம் அல்லது ஒரு உள்ளூராட்சி நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற கம்பனிகள் தொடர்பில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் தற்போதைய செயலாற்றலை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உதவியுடன் ஆராய்தல் அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் பணியாகும்.

தற்போது, அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் மேற்பார்வையின் கீழ் காணப்படுகின்ற பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் கீழ் ஒழுங்குபடுத்தப்படுகின்ற 457 பொது முயற்சிகள் காணப்படுகின்றது. (மூலம்: பொது முயற்சிகள் திணைக்களம்)

அதனிடையே, 2025.03.12 மற்றும் 2025.03.26 ஆகிய திகதிகளில், அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவினால் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் விடயப்பரப்பின் கீழ் வரும் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் (National Medicines Regulatory Authority –NMRA) 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின்

அறிக்கைகள், விசேட கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் தற்போதைய செயலாற்றலை ஆய்வு செய்து, குழுவின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் இந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ளது.

**<u>நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம்</u>**

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையினால் 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| <u>நிறுவனம்</u> | <u>கணக்காய்வு அபிப்பிராயம்</u> | | |
|---|---|---|---|
| | **<u>2022</u>** | **<u>2023</u>** | **<u>2024</u>** |
| தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை | பாதகமான அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | கணக்காய்வு அபிப்பிராயம் இது வரை வழங்கப்படவில்லை. |

**<u>கணக்காய்வு அபிப்பிராயத்தின் வகைகள்</u>**

**01 <u>முனைப்பழியற்ற அபிப்பிராயம் (Unqualified Opinion)</u>**

நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் நிதி நிலையை நியாயமாக முன்வைக்கின்றது என.

**02 <u>முனைப்பழியுள்ள அபிப்பிராயம்</u> (Qualified Opinion)**

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங் களைத் தவிர, நிறுவனத்தின் நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என.

**03 <u>மறுப்பு அபிப்பிராயம்</u> (Disclaimer of Opinion)**

போதுமான அல்லது பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை இனங்காண முடியாமை காரணமாக கணக்குகள் குறித்து ஒரு கருத்தை வெளிப்படுத்த முடியாது என.

**04 <u>பாதகமான அபிப்பிராயம்</u> (Adverse Opinion)**

நிறுவனத்தின் நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கவில்லை என.

**<u>தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை</u>**

(சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு)

**விசாரணை செய்யப்பட்ட திகதிகள் - 2025.03.12 மற்றும் 2025.03.26**

**<u>கலந்துரையாலுக்கு உட்படுத்தப்பட்ட விடயங்கள்</u>**

**01. <u>நிறுவனம் தொடர்பான பொதுவான விடயங்கள்</u>**

**1.1 <u>தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் நோக்கங்கள்</u>**

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் நோக்கங்களில், "பயனுள்ள, பாதுகாப்பான மற்றும் தரமான மருந்துகள், மருத்துவ சாதனங்கள் மற்றும் **தடைசெய்யப்பட்ட** பொருட்கள் பொதுமக்களுக்கு நியாயமான விலையில் வழங்கப்படுவதை உறுதி செய்வதே" என்ற அதன் முக்கிய நோக்கத்திற்கு குழு விசேட கவனம் செலுத்தியதுடன் ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்ட சமூகப் பொறுப்பை குழு வலியுறுத்தியது.

**1.2 <u>உள்ளக கணக்காய்வு</u>**

நிறுவனத்திற்கு உள்ளக கணக்காய்வு பிரிவு ஸ்தாபிக்கப்படாமை மற்றும் 10 வருட காலப்பகுதியில் உள்ளக கணக்காய்வு பிரிவு நிறுவுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்தன அல்லது மேற்கொள்ளப்படவில்லை என்பதையும் குழு கலந்துரையாடலுக்கு உட்படுத்தியது.

நிறுவனத்திற்கு உள்ளக கணக்காய்வாளர் எவரும் நியமிக்கப்படவில்லை என்பதும், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் தற்போதைய பிரதான உள்ளக கணக்காய்வாளர் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் பதில் உள்ளக கணக்காய்வாளராகப்

பணியாற்றி வருவதும், நிறுவனத்திற்கு சமீபத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உள்ளக கணக்காய்வாளர் பணிக்குத் திரும்ப மாட்டார் என்பதும் அவனிக்கப்பட்டது. இதற்கு முன்பு ஒரே ஒரு முறை மட்டுமே இந்த நோக்கத்திற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்றும், ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் தயாரிப்பதற்கும், பதவிகளின் பெயர்களைத் தீர்மானிப்பதற்கும், உள்ளக கணக்காய்வாளர் பதவி உட்பட பல பதவிகளுக்கு அங்கீகாரம் பெறுவதற்கும் கணிசமான காலம் செலவிடப்பட்டுள்ளது என்றும், தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் சுமார் 256 பேராக இருந்த போதும், 3 வருட காலப்பகுதியில் நிறுவனத்தின் உண்மையான ஊழியர்கள் சுமார் 130 பேர் என்றும் குழுவின் முன் தெரியவந்தது.

**குழுவின் பரிந்துரை**

நிறுவனத்திற்கு ஒரு உள்ளக கணக்காய்வாளரை உடனடியாக நியமிக்க நடவடிக்கை எடுத்தல் மற்றும் இது தொடர்பான அறிக்கையை **1 மாதத்திற்குள்** கணக்காய்வாளர்; தலைமை அதிபதிக்கு பிரதியுடன் குழுவிற்கு சமர்ப்பித்தல்.

**பரிந்துரையை அமுல்படுத்த வேண்டிய பொறுப்பான உத்தியோகத்தர்கள் நிறுவனங்கள்**

செயலாளர் - சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
தலைவர் - தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை

### 1.3 2025 சனவரி 26 இல் பதவியணியினர்கள்

நிறுவனத்தின் அத்தியாவசிய ஊழியர்களின் வெற்றிடங்கள் குறித்து குழுவின் கவனம் செலுத்தப்பட்டது. அதன்படி, சிரேஸ்ட நிலையில் 15 வெற்றிடங்கள், 67 மூன்றாம் நிலை வெற்றிடங்கள் மற்றும் மூன்றாம் நிலை மருந்துகளைக் கையாளும் ஏராளமான அதிகாரிகள் உட்பட 120 அதிகாரிகள் பற்றாக்குறை உள்ளது. மருந்து மதிப்பீட்டு அலுவலர், மருந்து ஆய்வாளர் போன்ற

பதவிகளுக்கான பதவி உயர்வு நடைமுறையில் உள்ள சிக்கல்கள் மற்றும் முதன்மை சேவை வகை அலுவலக உதவியாளர் பதவிகளில் உள்ள வெற்றிடங்கள் குறித்து குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

2025 சனவரி 01 ஆந் திகதி ஆய்வுகூடத்திற்கு 15 அதிகாரிகள் நியமிக்கப்பட்டதாகவும், 2025 ஆம் ஆண்டுக்கு 65 பேரை நியமிக்க அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாகவும், தற்போது 55 வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும், பிரதமரின் செயலாளர் தலைமையிலான குழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு ஆட்சேர்ப்பு தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், 37 உதவி மருந்து மதிப்பீட்டு உத்தியோகத்தர் மற்றும் உதவி மருந்து ஆய்வாளர் பதவிகள் உட்பட மூன்றாம் நிலை பதவிகளின் காலியிடங்களை நிரப்ப தேவையான அங்கீகாரம் இப்போது வழங்கப்பட்டுள்ளதாகவும் குழுவின் முன் தெரியவந்தது. மருந்து ஆய்வாளர், உதவி மருந்து ஆய்வாளர் மற்றும் மருந்து மதிப்பீட்டு உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான உள்ளக பதவி உயர்வு முறை இல்லாததால் நிறுவனத்திற்குள் உள்ள உத்தியோகத்தர் மிகவும் விரக்தியடைந்துள்ளதாகவும், அவர்களை நிறுவனத்திற்குள் தக்கவைத்துக்கொள்வது கடினமாக உள்ளமையும் குழுவின் கவனத்தை ஈர்த்தது.

பணிப்பாளர் ஒழுங்குபடுத்தல், பணிப்பாளர் ஆய்வுகூடம் மற்றும் பணிப்பாளர் நிதி பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் சுமார் 2 வாரங்களுக்கு முன்பு தயாரிக்கப்பட்டு சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சிற்கு அனுப்பப்பட்டதாகவும், அலுவலக உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்ய அங்கீகாரம் பெறப்படாததால், சில சேவைகளைப் பராமரிப்பது கடினமாகிவிட்டதாகவும் குழுவின் முன் தெரியவந்தது.

முதன்மை வகைப் பதவியான அலுவலக உதவியாளர் பதவிக்கு, பல்நோக்கு அபிவிருத்தி படையணி மூலம் ஆட்சேர்ப்பு செய்வது அரசின் கொள்கை என்றும், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வலியுறுத்திய போதிலும், அலுவலக உதவியாளர் பதவி, பல்நோக்கு அபிவிருத்தி படையணியை விட உயர்ந்த பதவி என்பதால், அதன் மூலம் ஆட்சேர்ப்பு செய்ய முடியாது என்பது குழுவின் முன் தெரியவந்தது.

**<u>குழுவின் பரிந்துரைகள்</u>**

i. நிறுவனத்திற்குள் உள்ளக பதவி உயர்வுகள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி சரியான வழிமுறையை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

ii. இதுவரை தயாரிக்கப்படாத பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் தயாரித்து (SOR) தேவையான அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல் மற்றும் இந்த விடயங்கள் குறித்த அறிக்கையை **<u>1 மாதத்திற்குள்</u>** கணக்காய்வாளர்; தலைமை அதிபதிக்கு பிரதியுடன் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

iii. முதன்மைப் பிரிவுப் பதவிகளுக்கான பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பான பிரச்சினை முழு பொதுச் சேவையையும் பாதிக்கும் என்பதால், இந்த விடயத்தைக் கருத்தில் கொண்டு, முதன்மைப் பிரிவுப் பதவிகளுக்கான பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான புதுப்பிக்கப்பட்ட வழிமுறையைத் தயாரிப்பதற்குத் தேவையான முன்மொழிவுகளை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். மேலும், இந்த விடயங்கள் குறித்த

அறிக்கையை **1 மாதத்திற்குள்** கணக்காய்வாளர்; தலைமை அதிபதிக்கு பிரதியுடன் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

**பரிந்துரையை அமுல்படுத்த வேண்டிய பொறுப்பான உத்தியோகத்தர்கள்/ நிறுவனங்கள்**

செயலாளர் - சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு - பரிந்துரை இல. (i), (ii)

தலைவர் - தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை - பரிந்துரை இல. (i), (ii)

முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் - பரிந்துரை இல. (iii)

## 02. சட்டத்தின் ஏற்பாடுகள் நிறைவேற்றாமை

(அ) சட்டத்தின் உப பிரிவு 14 (ஐ) இன் படி, உரிமங்களின் கீழ் இறக்குமதி செய்யப்படும் மருந்துகள், மருத்துவ சாதனங்கள், தடைசெய்யப்பட்ட பொருட்கள் அல்லது விசாரணை மருந்துப் பொருட்களின் அளவு குறித்த தரவுகளை அதிகாரசபை சேகரிக்க வேண்டியிருந்தாலும், அது அதன்படி செயல்படவில்லை என்று குழுவில் விவாதிக்கப்பட்டது. மருந்துகளை ஒழுங்குபடுத்துவதற்கு, தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் முறை அதிகாரசபை நாட்டின் மருந்துகளின் தேவை மற்றும் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் மருந்துகளின் அளவு குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும் என்று குழுவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியும் கருதினர். ஊழியர் பற்றாக்குறை காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும், இந்தத் தரவு சேகரிப்பு தற்போது இலங்கை சுங்கத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குழு அவதானித்தது.

**குழுவின் பரிந்துரை**

2015 இன் 05 ஆம்இலக்க தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்ததும் அதிகாரசபை சட்டத்தின் உப பிரிவு 14 (ஐ) இன் படி, மருந்துகள் மற்றும் மருந்துப் பொருட்களின் தேவை மற்றும் அளவு குறித்த

தரவுகளைச் சேகரிப்பதற்கும், நாட்டில் மருந்துகளின் கிடைக்கும் தன்மையை ஒழுங்குபடுத்துவதற்கும் முன்மொழிவுகளைத் தயாரித்தல்.

**<u>பரிந்துரையை அமுல்படுத்த வேண்டிய பொறுப்பான உத்தியோகத்தர்கள்/ நிறுவனங்கள்</u>**

செயலாளர் - சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
தலைவர் - தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை

(ஆ) சட்டத்தின் உப பிரிவுகள் 30(1) மற்றும் 31(1) இன் அடிப்படையில் தேசிய ஆலோசனைக் குழு ஸ்தாபிக்கப்படவில்லை, மேலும் தேசிய மருந்துக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை மற்றும் மருந்து விலைகளை ஒழுங்குபடுத்துவது குறித்து குழுவில் விவாதிக்கப்பட்டது. தற்போதைய சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் தேசிய ஆலோசனைக் குழுவையும் மேல்முறையீட்டுக் குழுவையும் நிறுவியுள்ளதையும், 2005 இல் உருவாக்கப்பட்ட தேசிய மருந்துக் கொள்கை தற்போது நடைமுறையில் இருப்பதையும் அவதானிக்க முடிந்தது. 2019 ஆம் ஆண்டு உலக சுகாதார அமைப்பின் உதவியுடன் வரைவு தயாரிக்கப்பட்டாலும், அது அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும், தேசிய ஆலோசனைக் குழு அதை மறுபரிசீலனை செய்ய முடிவு செய்துள்ளதாகவும், மருந்து விலைகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளதால், இந்த நேரத்தில் மருந்து விலைகள் தொடர்பாக எந்த தலையீடும் செய்ய முடியாது என்றும் குழுவின் முன் வெளிப்படுத்தப்பட்டது.

மருந்துகளின் தரம் மற்றும் விலையில் பல சிக்கல்கள் உள்ளன, மேலும் இதய சத்திர சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் Papaverine hydrochloride என்ற மருந்து வெவ்வேறு விலைகளில்

கிடைக்கிறது, அதாவது 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 76,500, 2019 இன் போது ரூபா 34000, 2020 இன் போது ரூபா

35000, 2021 இன் போது 2022 இன் போது ரூபா 41000, 2023 இன் போது ரூபா 72500 மற்றும் 2023 இன் போது ரூபா 50,776 தொகைக்கு இந்த நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டதாகவும், அதே மருந்தை தற்போது சுகாதார அமைச்சு ரூபா 370 இற்கு கொள்வனவு செய்வதாகவும் அவர் கூறினார். இது தொடர்பாக ஒரு பெரிய நிதி மோசடி நடந்துள்ளது, மேலும் இவ்வளவு பெரிய பணத்தை வீணாக்க அனுமதித்ததில் குழு தனது அதிருப்தியை வெளிப்படுத்தியது. இந்த சூழ்நிலையைக் குறைக்க பிராந்திய விலைகளைக் கருத்தில் கொள்வது பொருத்தமானது என்று குழு கருதியது.

பொதுமக்களுக்கு குறைந்த விலையில் மருந்துகள் வழங்கப்படுவதை உறுதி செய்வது நிறுவனத்தின் பொறுப்பு என்பதை குழு அவதானித்தது. மேலும், மருந்துகளின் குறைந்தபட்ச விலைகள் குறித்து வர்த்தமானி அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிக்கத் தவறியதால் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது என்றும், இதை சரிசெய்ய அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குழு வலியுறுத்தியது.

இந்த நடவடிக்கைகள் 2025 மார்ச் 25 ஆந் திகதிக்கு முன்னர் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும், ஒரே வகை மருந்துக்கு 100 முதல் 200 வியாபாரப் பெயர்கள் இருப்பதால், அந்த மருந்துகளின் விலைகள் குறித்து நுகர்வோர் விழிப்புணர்வை ஏற்படுத்துவது மிகவும் கடினம் என்றும், எதிர்காலத்தில் வியாபாரப் பெயர்களின் எண்ணிக்கையை மிகக் குறைவாகப் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குழுவில் கவனிக்கப்பட்டது.

மருந்துகளை வாங்குவதில் வியாபாரப் பெயர்களை கட்டுப்படுத்துவது பெறுகை கொள்கைகளை மீறக்கூடும் என்பதால், இது தொடர்பாக பெறுகை ஆணைக்குழுவிடம் ஆலோசனை பெறுவது பொருத்தமானது என்று குழு வலியுறுத்தியது. மருந்துகளுக்கான தனியான பெறுகை வழிகாட்டுதல்களைத் தயாரிக்க பெறுகை ஆணைக்குழு ஒப்புக்கொண்டதையும், மருந்துகளின் விலைகள் குறித்து பொதுமக்களுக்குத் தெரிவிக்க “Mediverify app” என்ற செயலி உருவாக்கப்பட்டுள்ளதையும் குழு அவதானித்தது.

**<u>குழுவின் பரிந்துரை</u>**

பிராந்திய விலைகளைக் கருத்தில் கொண்டு, மருந்து விலைகளை ஒழுங்குபடுத்துவதற்கான விலை நிர்ணய சூத்திரத்தை உருவாக்க அவசர நடவடிக்கை எடுக்கவும், அது குறித்த அறிக்கையை (மருந்துகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச விலைகள் குறித்து பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் முன்மொழிவுகள் உட்பட) **<u>2025 ஏப்ரல் 12</u>** ஆந் திகதிக்கு முன் கணக்காய்வாளர்; தலைமை அதிபதிக்கு பிரதியுடன் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

**<u>பரிந்துரையை அமுல்படுத்த வேண்டிய/ பொறுப்பான உத்தியோகத்தர்கள்/ நிறுவனங்கள்</u>**

செயலாளர் - சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

தலைவர் - தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை

(இ) சட்டத்தின் உப பிரிவு 69(1)(ஆ)(எ) இன் படி மருத்துவ சாதன மதிப்பீட்டுக் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்த இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் சபையின் தேவை இப்போது நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதைக் குழு கவனித்தது, மேலும் உப பிரிவுகள் 72(1) மற்றும் 93(1) இன் படி மருத்துவ சாதனங்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட தயாரிப்புகளை மதிப்பிடுவதற்கு

அந்தந்த மதிப்பீட்டுக் குழுக்களுக்கு பொதுவான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட வேண்டும் என்றாலும்,

அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை குழு கவனத்தில் கொண்டது. தொடர்புடைய வழிகாட்டுதல்கள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், தடைசெய்யப்பட்ட தயாரிப்புகள் மற்றும் மருத்துவ சாதனங்கள் வழிகாட்டுதல்கள் மூலம் கட்டுப்படுத்தப்படுகின்றன என்றும், தொடர்புடைய விதிமுறைகள் வர்த்தமானியில் வெளியிடப்படவில்லை என்றும் குழுவின் முன் வெளிப்படுத்தப்பட்டது.

வாசனை திரவியங்களை ஒழுங்குபடுத்த தானாக முன்வந்து கோரும் நிறுவனங்களுக்கு மட்டுமே ஒழுங்குமுறை மேற்கொள்ளப்பட்டாலும், ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகாரசபையின் கீழ் வாசனை திரவியங்களை ஒழுங்குபடுத்துவது பொருத்தமானது என்று குழுவில் காணப்பட்டது. “கோவிட்-மாத்திரை" போன்ற எந்தவொரு நிறுவனத்தாலும் ஒழுங்குபடுத்தப்படாத தயாரிப்புகளை முறையாக ஒழுங்குபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும், அழகுசாதன நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் அழகுசாதனப் பொருட்களின் வகைகள் குறித்தும், குறிப்பாக சருமத்தை ஒளிரச் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள் குறித்தும் குழுவினால் கவனம் செலுத்தப்பட்டது.

மருத்துவ சாதனங்களைப் பதிவு செய்வது தொழில்நுட்பக் கருத்தில் கொண்டு ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகாரசபையால் மேற்கொள்ளப்படுகிறது என்பதும், மருந்து ஆய்வகங்களின் செயல்பாடு மற்றும் தனியார் மருத்துவமனைகளின் ஒழுங்குபடுத்தல் ஆகியவை தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபை சட்டத்தின்படி மேற்கொள்ளப்படுகின்றன என்பதும் அவதானிக்கப்பட்டது.

**<u>குழுவின் பரிந்துரை</u>**

வாசனை திரவியங்கள் மற்றும் ஊட்டச்சத்து மேலதிகம் போன்ற ஏனைய தயாரிப்புகளின் மதிப்பீட்டிற்கான வழிகாட்டுதல்களை விரைவில் தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது மற்றும் இது தொடர்பான முன்னேற்றத்தை **<u>3 மாதங்களுக்குள்</u>** கணக்காய்வாளர்; தலைமை அதிபதிக்கு பிரதியுடன் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

**<u>பரிந்துரையை அமுல்படுத்த வேண்டிய பொறுப்பான உத்தியோகத்தர்கள்/ நிறுவனங்கள்</u>**

செயலாளர் - சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
தலைவர் - தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை

(ஈ) சட்டத்தின் உப பிரிவுகள் 72(4) மற்றும் 93(4) இன் படி மருத்துவ சாதனங்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட தயாரிப்புகளுக்கான தொடர்புடைய மதிப்பீடுகளை நடத்துவதற்கு குறிப்பிட்ட கால வரம்புகள் உட்பட, பின்பற்ற வேண்டிய நடைமுறைகளைக் குறிப்பிடும், நல்ல உற்பத்தி நடைமுறைகள் மற்றும் ஏனைய தொடர்புடைய வழிகாட்டுதல்கள் குறித்த வழிகாட்டுதல்களை அமல்படுத்துவதற்கான விதிமுறைகள் தயாரிக்கப்பட வேண்டும் என்றாலும், குழு அதன்படி செயல்படவில்லை என்பதையும், இது தொடர்பாக குழு தலையிட வேண்டும் என்றும் பரிந்துரைத்தது.

(உ) சட்டத்தின் துணைப்பிரிவுகள் 74 (1) மற்றும் 95 (1) இன் கீழ் அனுமதிக்கப்பட்ட மருத்துவ சாதனங்கள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட தடைசெய்யப்பட்ட தயாரிப்புகளை அமைச்சர் பட்டியலிட வேண்டியிருந்தாலும், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

<u>**குழுவின் பரிந்துரை**</u>

தொடர்புடைய வர்த்தமானியை வெளியிட்டதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும், பட்டியல்களை விரைவில் வெளியிட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரைத்தது.

<u>**பரிந்துரையை அமுல்படுத்த வேண்டிய பொறுப்பான உத்தியோகத்தர்கள்/ நிறுவனங்கள்**</u>

செயலாளர் - சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
தலைவர் - தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை

(ஊ) சட்டத்தின் உப பிரிவுகள் 83(6) மற்றும் 102(6) இன் படி மருத்துவ சாதனங்கள் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள் மதிப்பீட்டுக் குழுக்கள் மற்றும் தேசிய மருந்து தரப் பாதுகாப்பு ஆய்வுகூடம் ஆகியவற்றால் பரிசோதனை அல்லது மதிப்பீட்டுச் செயல்பாட்டில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், பரிசோதனை அல்லது மதிப்பீட்டுச் செயல்பாட்டில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், அத்தகைய செயல்முறைக்கான கால வரம்புகள், கூட்டங்கள் நடத்தப்பட வேண்டிய விதம், கூட்டங்களில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகளில் சேர்க்கப்பட வேண்டிய விஷயங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடும் விதிமுறைகளைத் தயாரிக்க அமைச்சர் தேவைப்பட்டாலும், தொடர்புடைய பணிகள் அதன்படி செய்யப்படவில்லை என்பதையும், தொடர்புடைய பணிகளை முடிக்க குழு பரிந்துரைத்ததையும் குழு அவதானித்தது.

(எ) சட்டத்தின் பிரிவுகள் 84(2), 85, 103(2) மற்றும் 104 இன் கீழ் மருத்துவ சாதனங்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட தயாரிப்புகளைப் பதிவு செய்தல் மற்றும் பதிவு மறுப்பு வழக்குகள் குறித்து வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விதிமுறைகள் மூலம்

பொதுமக்களுக்கு அறிவிக்கப்படவில்லை என்றும், 2019 ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட மருந்துகள் 2019 அக்டோபர் 09 திகதிய இலக்கம் 2144/20 என்ற அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்தாலும், அதன் பின்னர் அதன் படி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

<u>குழுவின் பரிந்துரை</u>

பதிவு மற்றும் பதிவு நிரகரித்த சந்தர்ப்பங்கள் தொடர்பாக வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விதிமுறைகள் மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிப்பதற்கான நடைமுறைகளை ஆய்வு செய்தல்.

**<u>பரிந்துரையை அமுல்படுத்த வேண்டியஃ பொறுப்பான உத்தியோகத்தர்கள்/ நிறுவனங்கள்</u>**

செயலாளர் - சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
தலைவர் - தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை

(ஏ) சட்டத்தின் பிரிவு 123 இன் படி அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட மேல்முறையீடுகளை பரிசீலிக்க 2025 பெப்ரவரியில் ஒரு மேல்முறையீட்டுக் குழு நிறுவப்பட்டது என்று குழுவில் அவதானிக்கப்பட்டது.

**03. <u>பெறுகைகள் முகாமைத்துவம்</u>**

**3.1 <u>e- NMRA Automation முறைமை</u>**

குழுவின் கவனம் e- NMRA Automation முறைமைக்கு ஈர்க்கப்பட்டதுடன் தரவு அமைப்பு தற்போது செயலிழந்து காணப்படுவதாகவும், தரவு அமைப்பிலிருந்து தரவு நீக்கம் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவில் (CID) விசாரணை நடைபெற்று வருவதாகவும், அந்த முறைமைக்காக ரூபா 12 மில்லியன் செலவாகியுள்ளதாகவும் குழு அதிருப்தி தெரிவித்தது. தரவு

மேலும் அந்தப் பணத்தால் எந்தப் பலனும் கிடைக்கவில்லை. மேலும், சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பெயர் Epic Lanka என்பது குழு கூட்டத்தில் தெரியவந்தது. இந்தத் தரவு அமைப்பின் பயன்பாட்டை முற்றிலுமாக முடிவுக்குக் கொண்டு வந்து புதிய தரவு அமைப்பை விரைவாகத் தயாரிப்பதன் முக்கியத்துவத்தை குழு சுட்டிக்காட்டியது. இந்தத் தரவு அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட தரவுகள் குறித்தும் குழு கவனத்தை ஈர்த்ததுடன் தரவு நீக்கம் சந்தேகத்திற்குரியது என்பதையும் குழு அவதானித்தது.

**<u>குழுவின் பரிந்துரைகள்</u>**

i. இந்த தரவு அமைப்பு தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தொடர்புடைய நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பதில் ஏற்பட்ட சிக்கல்கள் மற்றும் இதற்காக செலவிடப்பட்ட பணத்தை மீட்டெடுப்பதற்காக நிறுவன விசாரணை நடத்தப்பட்டால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கையை **<u>01 மாதத்திற்குள்</u>** கணக்காய்வாளர்; தலைமை அதிபதிக்கு பிரதியுடன் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

ii. இந்த தரவுத்தளத்திலிருந்து நீக்கப்பட்ட நிறுவனங்களின் பட்டியல் மற்றும் அந்த நிறுவனங்கள் கோரிய மருந்து வகைகள் குறித்த அறிக்கையை குழுவிடம் சமர்ப்பித்தல், அதன் நகல்களை தணிக்கைத் தலைவரிடம் சமர்ப்பித்தல்.

iii. இந்த தகவல் முறைமையின் பணிகள் டிஜிட்டல் பொருளாதார விவகார அமைச்சகத்தின் அறிவுறுத்தல்களின்படி மேற்கொள்ளப்படும்.

**<u>பரிந்துரையை அமுல்படுத்த வேண்டிய பொறுப்பான உத்தியோகத்தர்கள்/ நிறுவனங்கள்</u>**

செயலாளர் - சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

தலைவர் - தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை

### 3.2 <u>மருந்து தகவல் மறுசீரமைப்பு தரவு முறைமை (Revamping the Medicine Database)</u>

மருந்து தகவல் சீர்திருத்த தரவுத்தளத்தை உருவாக்குவதற்கான ஒப்பந்தம் 2020 ஆம் ஆண்டில் ஒரு தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட போதிலும், கொள்முதல் வழிகாட்டுதல்களின் 8.9.1(ஆ) இன் படி முறையான ஒப்பந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவில்லை. வழிகாட்டுதல்களின் 8.12.2 இன் படி, முழு ஒப்பந்தத் தொகையையும் முறையான ஆய்வு இல்லாமல் 2021 டிசம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 4,774,752 செலுத்தியதால் நிறுவனத்திற்கு ஏற்பட்ட நிதி இழப்பு குறித்து குழு தீவிர கவனத்தை ஈர்த்ததுடன் பூர்த்திச் சான்றிதழைப் பெறாமல் மேலும் இந்த அமைப்பு இன்னும் செயல்படவில்லை.

மேற்படி தகவல் அமைப்பு தொடர்பாக எந்த தொழில்நுட்பக் குழுவும் நியமிக்கப்படவில்லை என்பதும், தகவல் தொழில்நுட்ப உதவி இயக்குநர் ஒருவர் இந்த விஷயத்தைக் கையாண்டுள்ளார் என்பதும், அவரது பரிந்துரையின் பேரில் இந்த பணம் செலுத்தப்பட்டுள்ளது என்பதும், இந்த பணம் செலுத்துவதற்கான அங்கீகாரம் 2021.12.30 ஆந் திகதி தலைமை நிர்வாக அதிகாரியின் கையொப்பத்துடன் வழங்கப்பட்டுள்ளது என்பதும் அவதானிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட கட்டணத்தை பரிந்துரைத்த தகவல் தொழில்நுட்ப உதவி பணிப்பாளர் பதவிநீக்கம் செய்யப்பட்டதாகவும், கேள்விக்குரிய நிறுவனத்தின் பெயர் ஐழுஏயு ஆநுனுஐஊஐநு னுயுவுயுடீயுளுநு ளுலுளுவுநுஆ என்றும், 2021 செப்டம்பர் முதல் 2023 மே வரை அவ்வப்போது Hosting fee ஆக ரூபா

1.2 மில்லியன் செலுத்தப்பட்டதாகவும் குழுவின் முன் தெரியவந்தது.

**<u>குழுவின் பரிந்துரைகள்</u>**

i. மருந்து தகவல் மறுசீரமைப்பு தரவு முறைமையை தயாரித்த பின்பு, ரூபா 4,774,752 செலுத்துவதற்கு உரிய நிறுவனமாக அங்கீகாரம் வழங்கிய உத்தியோகத்தர்கள் மீது முறையான விசாரணை நடத்தி குறிப்பிட்ட பரிந்துரைகளுடன் (01 மாதத்திற்குள் விசாரணையை ஆரம்பித்து) இடைக்கால அறிக்கையை 2 மாதங்களுக்குள் கணக்காய்வாளர்; தலைமை அதிபதிக்கு பிரதியுடன் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

ii. இந்தத் தரவு முறைமைக்காகச் செலவிடப்பட்ட பணத்தை அறவிடுவதற்கும், தேவையான சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும் நிறுவனரீதியில் விசாரணை நடத்துதல்.

iii. இந்தத் தரவு முறைமையைப் பராமரிப்பதற்குப் பொறுப்பான குறிப்பிட்ட உத்தியோகத்தரை நியமித்தல்.

iv. டிஜிட்டல் விவகார அமைச்சின் ஆலோசனையுடன், தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை, மருத்துவ விநியோகப் பிரிவு மற்றும் அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் போன்ற அனைத்து நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து ஒற்றைத் தகவல் அமைப்பை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை குழு கவனத்தில் கொண்டது. டிஜிட்டல் பொருளாதார விவகார அமைச்சின் செயலாளருடன் ஒருங்கிணைந்து, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், புதிய தரவு முறைமை தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் குறித்து அந்த அமைச்சிலிருந்து ஆலோசனை பெற்றுக்கொள்ளல்.

**<u>பரிந்துரையை அமுல்படுத்த வேண்டிய பொறுப்பான உத்தியோகத்தர்கள்/நிறுவனங்கள்</u>**

செயலாளர் - சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

தலைவர் - தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை

**04.** 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான மருந்துகளின் தேவை, பெறுகைகள், வழங்கல், விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் குறித்த விசேட கணக்காய்வு அறிக்கையின் அவதானிப்புகள் (இணைப்பு 01) - பாராளுமன்ற வெளியீட்டு இலக்கம் 60/2024

இணைப்பு 01 ஐ கீழே உள்ள இணைப்பு வழியாக தரவிறக்கம் செய்யலாம்.

**http://www.auditorgeneral.gov.lk/web/images/audit-reports/upload/2024/special/Medicine_reupload/Sinhala%20Document%20with%20Cover%20Edited%202024.06.05.pdf**

4.1 **<u>பதிவிலிருந்து விடுவிக்கும் கடிதங்களை வழங்குதல் (WOR)</u>**

சட்டத்தின் பிரிவுகள் 58, 59, 82, 83 மற்றும் 109 இன் படி, எந்தவொரு மருந்தையும் அல்லது மருத்துவ சாதனத்தையும் ஆணையத்தில் பதிவு செய்யாமலும், ஆணையத்திடமிருந்து உரிமம் பெறாமலும் தயாரிக்கவோ அல்லது இறக்குமதி செய்யவோ கூடாது. உயிர்களைக் காப்பாற்றுதல், தொற்று நோய்கள் அல்லது தொற்றுநோய்கள் பரவுவதைத் தடுத்தல், தேசிய நலன் மற்றும் தேசிய பாதுகாப்பு போன்ற சிறப்பு நிகழ்வுகளில் மட்டுமே பதிவிலிருந்து விலக்கு கடிதங்களை (WOR) வழங்க அதிகாரம் வழங்கப்பட்டது. இருப்பினும், பதிவு ரத்து செய்தல், பதிவுசெய்யப்பட்ட சப்ளையர்கள் இல்லாதது போன்ற சூழ்நிலைகளின் கீழ் வராத காரணங்களுக்காக, மாநில மருந்துக் கூட்டுத்தாபனம், மருத்துவப் பொருட்கள் பிரிவு மற்றும் தனியார் நிறுவனங்கள் சார்பாகப் பதிவிலிருந்து விலக்கு கடிதங்களை வழங்குவதில் குழு விசேட கவனம் செலுத்தியது.

பதிவிலிருந்து விலக்கு கடிதங்களை வழங்குவது தொடர்பான வழிகாட்டுதல்கள் 2019 இல் தயாரிக்கப்பட்டதாகவும், வழிகாட்டுதல்கள் 2024 இல் புதுப்பிக்கப்பட்டதாகவும், பரிசீலிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன என்றும், WOR களை வழங்கும்போது மருந்தின் தரம் மற்றும் பாதுகாப்பை முடிந்தவரை பாதுகாக்க எதிர்பார்க்கப்படுகிறது என்றும் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் 656 WOR கள் வழங்கப்பட்டதாகவும், நாட்டின் மருந்துகளுக்கான தேவை குறித்து எந்த முன்னறிவிப்பும் இல்லாததால் அவசரகால சூழ்நிலை உருவாக்கப்பட்டதாகவும், WOR களைப் பயன்படுத்தி நாட்டிற்கு தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்ததற்காக முன்னாள் சுகாதார அமைச்சர் மற்றும் தலைமை கணக்கியல் அதிகாரி உட்பட அனைவரும் சிறையில் அடைக்கப்பட்டதாகவும், தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் குழு தெரிவித்துள்ளது.

தரமற்ற மருந்துகளால் ஏற்படும் இறப்புகள் மற்றும் பார்வை இழப்பு குறித்து குழு மேலும் விவாதித்தது, மேலும் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை அதன் பொறுப்புகளுக்கு ஏற்ப செயல்படத் தவறியது குறித்து அதிருப்தி தெரிவித்தது.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையில் பதிவு பெற்ற பிறகு சில நிறுவனங்கள் மருந்து பெறுகை நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்றும், மருந்துகளை இறக்குமதி செய்யாத அல்லது கொள்முதல் செயல்பாட்டில் பங்கேற்காத நிறுவனங்களின் பதிவை 02 ஆண்டுகளுக்குள் ரத்து செய்ய தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைக்கு அதிகாரம் உள்ளது என்றும், அவசர சிறப்புத் தேவைகளின் அடிப்படையில் மருந்துகளை இறக்குமதி செய்ய

WOR வழங்கிய அனுமதியைப் பயன்படுத்தி நாட்டில் ஒரு மருந்து மாபியா நடைபெற்று வருவதாகவும், தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை அதன் பொறுப்பிற்கு வெளியே செயல்பட்டதாகத் தெரிகிறது என்றும் குழு தெரிவித்துள்ளது.

நாட்டில் மருந்துப் பற்றாக்குறை ஏற்படும் வரை மருந்துகளின் தேவையை அங்கீகரிக்காமல் இருப்பது ஒரு குறைபாடு என்றும், இந்தத் தவறு எங்கே செய்யப்பட்டது என்பது குறித்து குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டது என்றும் குழுவிடம் சுட்டிக்காட்டப்பட்டது. தற்போது, 862 வகையான மருந்துகளில், சுமார் 170 மருந்துகளுக்கு பற்றாக்குறை இருப்பதாகவும், NMRA பதிவுச் சான்றிதழ்களைக் கொண்ட வழங்குனர்கள் பெறுகை நடவடிக்கைகளில் பங்கேற்காததால், மருத்துவ விநியோகப் பிரிவு NMRA -விடம் WOR வழங்குமாறு கோருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. இலங்கையிலுள்ள அரசு மருத்துவமனைகளில் Salbutamol nebuliser solutions கரைசல் மருந்து 3 மாதங்களாக கிடைக்கவில்லை என்றும், இந்த நோக்கத்திற்காகப் பதிவுசெய்யப்பட்ட இரண்டு வழங்குனர்களும் இந்த மருந்தின் பெறுகை செயல்பாட்டில் பங்கேற்கவில்லை என்றும் குழு கூட்டத்தில் தெரியவந்தது.

பொதுத்துறைக்கு மருந்துகளை வழங்காமல் தனியார் துறைக்கு மட்டுமே மருந்துகளை வழங்கும் பதிவு செய்யப்பட்ட சப்ளையர்கள் மீது எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் மற்றும் 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 65 (1) இன் படி பதிவு மற்றும் உரிமத்தை ரத்து செய்யவோ அல்லது இடைநிறுத்தவோ முடியும் சூழ்நிலைகள் குறித்து குழு கவனம் செலுத்தியது. "**மருந்துகள் பொது மற்றும் தனியார் துறைகளுக்கு வழங்கப்படும், தவறினால் பதிவு மற்றும் உரிமம் ரத்து செய்யப்படும்**" என்ற நிபந்தனைகளை விதிக்காதது தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் தவறு என்று

குழு வலியுறுத்தியது. அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் மூலம் மருந்துகளை நேரடியாக இறக்குமதி செய்ய அனுமதிக்கும் வகையில் சட்டத்தைத் திருத்துவது பொருத்தமானது என்றும் குழு கருத்து தெரிவித்தது.

WOR வழங்குவதில் கருத்தில் கொள்ளப்பட்ட காரணிகள் குறித்து குழு கவனத்தை ஈர்த்தது, மேலும் WOR பொறிமுறையின் மூலம், அதிகாரசபையின் தலைமை நிர்வாக அதிகாரி 2020 டிசம்பர் 24 ஆந் திகதி ஒரு தனியார் நிறுவனத்திற்கு வழங்கிய கடிதத்தில், இதயம், கல்லீரல், சிறுநீரக நோய்கள் மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கு தயாரிப்பைப் பயன்படுத்துவதற்கான செலவு ரூபா. 2,563,080/- மதிப்புள்ள Furosemide syrup மருத்துவமனைகளுக்கு விநியோகிக்கப்பட்டது, மேலும் அதன் தரம் குறைவாக இருந்ததால், மருந்தின் முழு இருப்பும் 2021 அக்டோபர் 08 ஆந் திகதி பயன்பாட்டிலிருந்து திரும்பப் பெறப்பட்டது. பேராதனை போதனா மருத்துவமனையில் ஒரு பெண்ணின் மரணம் மற்றும் பதிவிலிருந்து விலக்கு கடிதங்களின் கீழ் மருத்துவ விநியோகப் பிரிவால் வாங்கப்பட்ட Bupavacaine மருந்தைப் பயன்படுத்தியதால் மற்றொரு பெண் அனுபவித்த கடுமையான பாதகமான எதிர்விளைவுகள் குறித்தும் குழு கவனத்தை ஈர்த்தது.

WOR குழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு, தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்த நிறுவனம் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து குழு விசாரித்தது, மேலும் அந்த நிறுவனம் கருப்புப் பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்பது தெரியவந்தது. மருந்துகளை இறக்குமதி செய்த பிறகு, விநியோகிப்பதற்கு முன்பு அவற்றின் தரம் சோதிக்கப்படுவதில்லை என்றும், அதற்கான ஆய்வுகூட வசதிகள் இல்லை என்றும் குழுவில் தெரியவந்தது.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையில் தற்போதுள்ள ஆய்வுகூடத்தின் திறனை அதிகரிக்க இன்னும் முடியவில்லை, மேலும் ஆய்வகத்தின் கட்டுமானம் குறித்து அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சருடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு, இந்தப் பணியை மேற்கொள்ள ITI விருப்பம் தெரிவித்துள்ளது. ஆய்வகம் தொடர்பாக SLINTEC உடன் கலந்துரையாடல்கள் எதிர்பார்க்கப்படுவதாகவும் காணப்பட்டது. இந்த நிறுவனத்தின் ரூபா 07 பில்லியன் நிதியைப் பயன்படுத்தி ஒரு ஆய்கூடத்தை நிர்மாணிப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து குழுவின் கவனம் செலுத்தப்பட்டது,

**<u>குழுவின் பரிந்துரைகள்</u>**

i. பெறுகைகள் செயல்பாட்டின் போது பொதுத்துறைக்கு மருந்துகளை வழங்காத பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்கள், அதாவது NMRA -இல் பதிவுசெய்யப்பட்ட தனியார் துறைக்கு மட்டும் மருந்துகளை வழங்குபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடிய வகையில் சட்டம்/விதிமுறைகளைத் திருத்துதல்.

ii. சட்டத்தைத் திருத்துதல் மற்றும் WOR வழங்குவதற்கான விதிகளைப் பயன்படுத்தி போதைப்பொருள் மாபியாவைக் கட்டுப்படுத்த தேவையான தலையீடுகளைச் செய்தல்.

iii. தரமற்ற மருந்துகள் குறித்து விசாரணைகளை நடத்துதல் மற்றும் அத்தகைய தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்யும் பதிவு செய்யப்பட்ட சப்ளையர்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுத்தல் மற்றும் அத்தகைய வழங்குனர்களை கருப்பு பட்டியலில் சேர்த்தல்.

iv. நிறுவனத்தின் நிதியைப் பயன்படுத்தி நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் அனைத்து மருந்துகளையும் பரிசோதிக்க ஒரு ஆய்வகத்தை நிர்மாணிப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்தல்.

v. மேற்கூறிய விஷயங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கையை **1 மாதத்திற்குள்** கணக்காய்வாளர்; தலைமை அதிபதிக்கு பிரதியுடன் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

**பரிந்துரையை அமுல்படுத்த வேண்டிய பொறுப்பான உத்தியோகத்தர்கள்/ நிறுவனங்கள்**

செயலாளர் - சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

தலைவர் - தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை

## 4.2 Special pathway முறையைப் பயன்படுத்தி தரப் பரிசோதனை இல்லாமல் நாட்டிற்கு மருந்துகளை இறக்குமதி செய்தல்.

(அ) 2022 செப்டம்பர் 16 ஆந் திகதிய பணிப்பாளர் சபையின் முடிவின்படி, உப குழுவின் அங்கீகாரத்திற்கு அனுப்பாமல், Special pathway அமைப்பு எனப்படும் விரைவான வழிமுறையின் (fast track) மூலம் தலைமை நிர்வாக அதிகாரியின் ஒப்புதலுடன் பதிவிலிருந்து விலக்கு கடிதங்களை வழங்கும் முறை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை குழு விசேட கவனம் செலுத்தியது. இந்த முறையில், Certificate of Analysis (COA), Certificate of Pharmaceutical Product (COPP), Stability report மற்றும் GMP report போன்ற மருந்தின் தொழில்நுட்ப அம்சங்கள் தொடர்பான எந்த தொழில்நுட்ப ஆவணங்களும் கருத்தில் கொள்ளப்படவில்லை என்பது குழுவில் தெரியவந்தது.

WOR உப குழுவின் அங்கீகாரம் இல்லாமல் இந்த Special pathway அமைப்பு மூலம் மருந்துகளை இறக்குமதி செய்யும் திட்டம் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி வைத்தியர் விஜித் குணசேகரவால் இயக்குநர்கள் குழுவிற்கு முன்மொழியப்பட்டது என்றும், இந்த Special pathway அமைப்பு மூலம் மருந்துகளை இறக்குமதி செய்யும்

காலகட்டத்தில் இயக்குநர்கள் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்திய அதிகாரிகளிடம் குழு விசாரித்ததாகவும், அந்தக் காலகட்டத்தில் குழந்தை மருத்துவ நிபுணர் டாக்டர் கோசல கருணாரத்ன மற்றும் டாக்டர் பிரதீப் குமாரசிங்க டி சில்வா ஆகியோர் பணிப்பாளர் சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தினர் என்றும், இந்த இரண்டு உத்தியோகத்தர்களும் இந்த Special pathway அமைப்புக்கு ஆட்சேபனை கடிதங்களை சமர்ப்பித்ததாகவும் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

அந்த நேரத்தில் பணிப்பாளர் சபையின்; வெளிப்படைத்தன்மையில் அவருக்கு நம்பிக்கை இல்லாததால் அவர் எந்த வாரியக் கூட்டத்திலும் கலந்து கொள்ளவில்லை என்பதும், சுகாதார சேவைகள் பணிப்பாளர்; நாயகம் இந்த Special pathway முறையை அவர் அங்கீகரிக்கவில்லை என்று கூறி கோப்பில் (minute) ஒரு பதிவு செய்திருப்பதும் குழுவில் தெரியவந்தது. Savorite என்ற நிறுவனத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளில் அத்தியாவசியமற்ற (Non essential) மருந்துகள் இருப்பதால், அவற்றை ஆட்சேபித்து, குழந்தை மருத்துவர்கள் கல்லூரி (College of Pediatricians) மற்றும் மருத்துவர்கள் கல்லூரி (College of Physicians) ஆகிய இரண்டும் ஆட்சேபனை கடிதங்களை வழங்கியதாக டாக்டர் கோசல கருணாரத்ன தெரிவித்தார்.

இந்த Special pathway அமைப்பைக் கையாள்வதில் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் மீது அமைச்சு செயலாளர் செலுத்திய செல்வாக்கு குறித்து குழு கவனத்தை ஈர்த்தது. சபைக் கூட்டங்களை நடத்துவதற்கான வழக்கமான நடைமுறைக்கு மாறாக, டிசம்பர் 2022 இல் கொழும்பில் உள்ள ஒரு முன்னணி ஹோட்டலில் நடைபெற்ற இரவு உணவோடு இணைந்து நடைபெற்ற சபைக் கூட்டத்தின் மூலம் WOR க்கான அங்கீகாரத்திற்காக

கடைசி நேரத்தில் மருந்துகளின் பெரிய பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டது

என்பதும், விவாதத்திற்கு எந்த வாய்ப்பும் வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது, இதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாகக் கூறி. இந்த நடவடிக்கைக்கு தனது ஆட்சேபனையை வெளிப்படுத்திய பேராசிரியர் திரு. எஸ்.டீ. ஜயரத்னவுக்கு ஒரு கடிதம் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும், வைத்தியர் திரு. கோசல கருணாரத்ன தொழில்நுட்பம் மூலம் இந்த விவாதத்தில்

இணைந்ததாகவும், மழைக்காலம் காரணமாக அவ்வப்போது அவரது இணைப்பு துண்டிக்கப்பட்டதாகவும், இந்த இரவு உணவிற்கான செலவுகளை சபை உறுப்பினர்களே தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொண்டதாகவும் அவர் குழுவின் முன் தெரிவித்தார். சபை உறுப்பினர் வைத்தியர் திரு. பிரதீப் குமாரசிங்க த சில்வா குழுவிடம் வெளிப்படுத்தினார்.

இந்த பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு பெறப்பட்ட ரூபா 100,000 முற்பணம் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தின் கணக்கில் மீண்டும் வைப்புச் செய்யப்பட்டுள்ளது, பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு வழக்கமாக வழங்கப்படும் கொடுப்பனவு இந்த இயக்குநர்கள் குழு கூட்டத்தில் செலுத்தப்படவில்லை, இன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழு கூட்டத்தின் செல்லுபடியாகும் தன்மை கேள்விக்குரியது, மேலும் அந்தக் கூட்டத்தின் கோரம் பராமரிக்கப்பட்டதா என்பதை விசாரிக்க வேண்டும்.

குறிப்பிட்ட காலகட்டத்தில், மருந்தியல் நிபுணர்கள் கல்லூரியைப் College of Pharmacologists)

பிரதிநிதித்துவப்படுத்தும் எந்தவொரு நிபுணரும் NMRA இன் இயக்குநர்கள் குழுவில் பரிந்துரைக்கப்படவில்லை, ஆனால் மருந்தியல் நிபுணர்கள் கல்லூரியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பேராசிரியர் பிரியதர்ஷனி கலப்பத்தி அந்தக் காலகட்டத்தில் மருந்துகள் மதிப்பீட்டுக் குழுவின் (Medicines Evaluation Committee- MEC) உறுப்பினராகப் பணியாற்றினார் என்பது கவனிக்கப்பட்டது. சுமார் 300 மருந்துகளின் பட்டியலுக்கு WOR களை வழங்க மருந்துகள் மதிப்பீட்டுக் குழவை அணுகியதாகவும், அந்த மருந்துகள் எதுவும் WOR குழுவால் அங்கீகரிக்கப்படாததால், WOR குழுவால் அங்கீகாரம் வழங்கப்படவில்லை என்றும் குழுவின் முன் தெரியவந்தது. நாட்டிற்குள் பாதுகாப்பற்ற மருந்துகளை இறக்குமதி செய்யும் இந்த நடைமுறையை நிறுத்துமாறு சனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டன, மேலும் அந்தக் கடிதங்களுக்கு எந்த பதிலும் கிடைக்கவில்லை, மேலும் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்ட நிறுவனங்களும் அந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த கேள்விக்குரிய மருந்து இறக்குமதி செயல்முறை நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் தலைவராகவும் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் இருந்த பேராசிரியர் திரு. எஸ்.டி. ஜயரத்ன மற்றும் வைத்தியர் திரு. விஜித் குணசேகர மற்றும் இந்த விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சராகச் செயல்பட்ட திரு. கெஹெலிய ரம்புக்வெல்ல ஆகியோர் செயற்பட்டிருந்தமை என்பதும், இந்த Special pathway முறை மூலம் மருந்துகளை இறக்குமதி செய்வது தொடர்பான செயல்முறை, வைத்தியர் திரு. விஜித் குணசேகர இனால் அமைச்சின் மேலதிக செயலாளருக்கு அனுப்பிய கடிதமாக இருந்தமையும் வெளிப்படுத்தப்பட்டதுடன் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட மருந்துகளின் பட்டியலில் அத்தியாவசியமற்ற மருந்துகள் மற்றும் பூசும் மருந்து வகைகள் இருப்பதும் குழுவில் தெரியவந்தது.

**குழுவின் பரிந்துரைகள்**

i. இந்தப் பிரச்சினையை விசாரிக்க நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் முன்னாள் வாரிய உறுப்பினர்களை குழுவின் முன் வரவழைத்தல். (அந்த அதிகாரிகள் 2025.03.12 ஆந் திகதி குழுவின் முன் வரவழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர்)

ii. WOR வழங்குவதற்கான வழக்கமான நடைமுறையிலிருந்து விலகி, ஒரு விசேட நடைமுறை மூலம் மருந்துகளை இறக்குமதி செய்வதன் காரணமாக நாட்டிற்குள் தரமற்ற மருந்துகள் நுழைவதால் ஏற்படும் சேதங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகள் பற்றிய தகவல்கள் குறித்த அறிக்கையை **1 மாதத்திற்குள்** கணக்காய்வாளர்; தலைமை அதிபதிக்கு பிரதியுடன் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

**பரிந்துரையை அமுல்படுத்த வேண்டியஃ பொறுப்பான உத்தியோகத்தர்கள்/ நிறுவனங்கள்**

செயலாளர் - சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
தலைவர் - தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை

(ஆ) 2022 டிசம்பர் மாதத்தின் போது கோரப்படாத முன்மொழிவுகள் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட 38 மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக Savorite என்ற நிறுவனத்திற்கு 38 பதிவு விலக்கு சான்றிதழ்களை அதிகாரசபை வழங்கியது, ஆனால் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம் தொடர்புடைய மருந்துகளின் மதிப்பீடுகளை நடத்தவில்லை, எனவே அதிகாரசபை அதன் பொறுப்பைத் தள்ளுபடி செய்து, தொடர்புடைய மருந்துகளின் தரம், பாதுகாப்பு மற்றும் செயல்திறனுக்கு (quality, safety, efficacy) அதிகாரசபை பொறுப்பல்ல

என்றும், அந்தப் பொறுப்பை மருத்துவ விநியோகப் பிரிவின் இயக்குநரே ஏற்க வேண்டும் என்றும் கூறியது குறித்து குழு உன்னிப்பாகக் கவனம் செலுத்தியது.

**<u>குழுவின் பரிந்துரைகள்</u>**

i. சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் உள்ளூர் பிரதிநிதி பற்றிய தகவல்களை குறித்த அறிக்கையை கணக்காய்வாளர்; தலைமை அதிபதிக்கு பிரதியுடன் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

ii. 323 மருந்துகளின் இறக்குமதியால் ஏற்பட்ட மொத்த சேதம் குறித்து விசாரணை நடத்தி குறித்த அறிக்கையை **<u>1 மாதத்திற்குள்</u>** கணக்காய்வாளர்; தலைமை அதிபதிக்கு பிரதியுடன் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

iii. சட்டத்தின் பலவீனங்களை களைய தொடர்புடைய விஷயங்களைக் கருத்தில் கொள்வது.

**<u>பரிந்துரையை அமுல்படுத்த வேண்டிய/ பொறுப்பான உத்தியோகத்தர்கள்/ நிறுவனங்கள்</u>**

செயலாளர் - சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
தலைவர் - தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை

(இ) தரமற்ற மருந்துகள் இத்தகைய தேவையற்ற முறைகளின் கீழ் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்பதும், Human immunoglobulin போன்ற மருந்துகளை நாட்டிற்கு இறக்குமதி செய்வதால் ஏற்படும் உயிர் இழப்பு குறித்து எந்த கணக்கீடும் செய்யப்படவில்லை என்பதும், பார்வையின்மையுடன் தொடர்புடைய Prednisolone மருந்தை இலங்கைக்கு இறக்குமதி செய்த நிறுவனம் இன்னும் கருப்புப் பட்டியலில் சேர்க்கப்படவில்லை

என்பதும் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது, மேலும் குழு இதற்கு தனது கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியது. பார்வையின்மை தொடர்பான மருந்தை இறக்குமதி செய்த உள்ளூர் நிறுவனம் “Chami Chemist” என்பது குழுவின் முன் தெரியவந்தது. மேலும், ஒழுங்குமுறை

ஆணையமாகச் சட்டத்தால் வழங்கப்பட்ட அதிகாரங்கள் அதன் அதிகாரத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்றும், மனித உயிர்களை கடுமையாக பாதிக்கும் மருந்துகளை ஒழுங்குபடுத்தும் செயல்பாடு துஷ்பிரயோகம் செய்ய அனுமதிக்கப்படக்கூடாது என்றும் குழு வலியுறுத்தியது.

**05.** **<u>தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் செயற்பாட்டை ஆய்வு செய்ய ஒரு உப குழுவை நியமித்தல்.</u>**

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் செயற்பாட்டை ஆராய தேவைப்பட்டால் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட உப குழுவை நியமிக்க குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

**06.** **<u>மருந்துகள் மற்றும் உபகரணங்களை இறக்குமதி செய்தல்</u>**

2025.03.26 ஆந் திகதி கூடிய இந்தக் குழு, மருந்துகள் மற்றும் சாதனங்களைப் பதிவு செய்தல் மற்றும் நாட்டிற்குள் மருந்துகள் மற்றும் சாதனங்களை இறக்குமதி செய்வது தொடர்பான பதிவு விடுவிப்பு (Waiver of Registration-WOR) சான்றிதழ்களை வழங்குதல் ஆகியவற்றின் முக்கிய பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தியது. 2015 இன் 5 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 109 இன் கீழ் பதிவிலிருந்து விடுவிப்பு கடிதங்களை வழங்கக்கூடிய

சூழ்நிலைகள் குறித்து செய்யப்பட்ட விதிகள் குறித்து குழு விவாதித்தது.

2022.10.25 ஆந் திகதிய குழுக் கூட்டத்தின் போது "**இலங்கையில் தொடர்ச்சியான மருத்துவ விநியோக சேவையைப் பராமரித்தல்**" என்ற தலைப்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் திரு. கெஹெலிய ரம்புக்வெல்ல கையொப்பமிட்ட அமைச்சரவைப் பத்திரம் (இணைப்பு 02) மீது குழு கவனம் செலுத்தியது. அதில், மருத்துவ விநியோகத் துறையில் தற்போதைய மருத்துவப் பொருட்களின் இருப்பு ஒரு முக்கியமான மட்டத்தில் உள்ளது என்றும், 2022.10.17 வரையில் மருத்துவ வழங்கல் துறையில் 151 மருந்துகள், 5278 சத்திர சிகிச்சை மருத்துவ உபகரணங்கள் மற்றும் நுகர்பொருட்கள், 18 கதிரியக்க உபகரணங்கள் மற்றும் 850 வழக்கமான மற்றும் நிரப்பு ஆய்வக உபகரணங்கள் பூஜ்ஜிய மட்டத்தில் உள்ளன என்றும், மேலும் பல உபகரணங்களின் இருப்பு அடுத்த 3 வாரங்களுக்குள் தீர்ந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 21 மருந்துகள் மற்றும் 2002 சத்திர சிகிச்சை மருத்துவ உபகரணங்கள் மற்றும் பொருட்களின் இருப்பு அளவுகள் மற்றும் மருத்துவமனைகளில் (நிறுவன மட்டத்தில்) இருப்பு அளவுகள் இன்னும் ஒரு முக்கியமான மட்டத்தில் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. இது மருத்துவப் பொருட்களுக்கு கடுமையான பற்றாக்குறை ஏற்படும் அபாயம் இருப்பதை சுட்டிக்காட்டும் முயற்சி என்று குழுவின் தலைவர் கூறினார். நாட்டின் சுகாதார நிறுவனங்களுக்கு வரும் காலங்களில் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், தையல் பொருட்கள் மற்றும் மயக்க மருந்துகள் போன்ற அத்தியாவசிய அறுவை சிகிச்சைப் பொருட்கள் மிகக் குறைவாகவே இருப்பதால், அடுத்த 3 வாரங்களுக்குள் அறுவை சிகிச்சை அறைகளின்

செயல்பாடு முற்றிலுமாக முடக்கப்படும் என்றும், அடுத்த 3 வாரங்களுக்குள் கையிருப்பு தீர்ந்துவிட்டால் முழு சுகாதார அமைப்பும் முற்றிலுமாக சரிந்துவிடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய கடன் முன்மொழிவுத் திட்டம் மற்றும் ஏனைய நிதிகளைப் பயன்படுத்தி **45 நாட்களுக்குள் 3 மாதங்களுக்கு**

போதுமான மருத்துவப் பொருட்களை இலங்கைக்கு வழங்குவதற்காக The Savorite Pharmaceuticals (Pvt) Ltd. (**703,** Atlantis Heights, Sarabhai Compound, Vadiwadi Road, Vadodara- 39007 Gujarat, India) நிறுவனம் தனது உடன்பாட்டை வெளிப்படுத்தியமையும், 2022.10.25 ஆந் திகதி வரையில் இந்த அமைச்சரவை குறிப்பு

சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையும் குழுக் கூடட்த்தின் போது அவதானிக்கப்பட்டது.

இந்திய கடன் முன்மொழிவுத் திட்டம் மூலம் வழங்கப்படும் நிதியை முழுமையாகப் பயன்படுத்த சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற குழு கூட்டத்தில் வழங்கப்பட்ட உத்தரவுகள் செயல்படுத்தப்படவில்லை என்பதும் குழு கூட்டத்தில் தெரியவந்தது. மேலே குறிப்பிடப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, நாட்டில் மருந்துப் பற்றாக்குறை இருந்தது என்பது யதார்த்தமானதா என்றும், நாட்டில் மருந்துப் பற்றாக்குறை ஏற்படும் வரை இந்த நிறுவனங்கள் செயல்படவில்லை என்றும் கேள்வி கேட்பது சிக்கலானது என்று குழு வலியுறுத்தியது. இந்த அமைச்சரவை குறிப்பில் பூச்சியமாகக் குறிப்பிடப்பட்டுள்ள மருந்துகளின் பெரும் பகுதி கட்டளையிடப்பட்டு சுமார் மூன்று வாரங்களுக்குள் பெறப்பட்டிருப்பதும், பெற வேண்டிய மருந்துகளின் இருப்பு குறித்து அமைச்சரவைப் பத்திரத்தில்

குறிப்பிடப்படவில்லை என்பதும், மருந்துகளின் இருப்பு குறித்து அமைச்சரவைக்கு போதுமான தகவல்கள் வழங்கப்பட்டதா என்பதும், 2023 செப்டம்பர் வரையில் மருந்துகளுக்காகப் பெறப்பட்ட ஐ.அ. டொலர் 360 மில்லியனில் ஐ.அ. டொலர் 160 மில்லியன் திறைசேரிக்கு மீளச் செலுத்தியமை தொடர்பாக குழு கவனம் செலுத்தியது.

இந்த அமைச்சரவைப் பத்திரத்தைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்கியவர் யார், அமைச்சரவைப் பத்திரத்தைத் தயாரித்தவர் யார், அதற்கு யார் ஒப்புதல் அளித்தார் என்பது குறித்து குழு உன்னிப்பாகக் கவனம் செலுத்தியது. மருத்துவ வழங்கல் பிரிவினால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், அமைச்சின் கூடுதல் செயலாளர் அமைச்சரவைப் பத்திரத்தைத் தயாரித்து, மருந்து ஒழுங்குமுறைப் பிரிவுக்கு சமர்ப்பித்ததாகவும், அமைச்சரவைப் பத்திரம் அமைச்சின் செயலாளர் மூலம் அமைச்சரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டதாகவும், அமைச்சின் செயலாளர் அமைச்சரவைப் பத்திரத்தைத் தயாரிக்க அறிவுறுத்தியுள்ளதாகவும் தெரியவந்தது. இருப்பினும், தரவுத்தளத்திலிருந்து பெறப்பட்ட தரவுகளில் பெற வேண்டிய உத்தரவுகள் பற்றிய ஏதேனும் குறிப்பு உள்ளதா மற்றும் அவை பரிசீலிக்கப்பட்டதா என்பது குறித்து குழுவின் கவனம் செலுத்தப்பட்டது. 2022.09.22 ஆந் திகதி வைத்தியர்; திரு. ஆர்.எம். ரத்நாயக்க அவரால் வைத்தியர்; திரு. டி.ஆர்.கே ஹேரத் (மருத்துவப் பொருட்கள் பிரிவு) அவருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தை மேற்கோள் காட்டி. முன்னிலையில், முன்கூட்டியே கட்டளையிட்டு பெறப்பட உள்ள இருப்புக்கள் தொடர்பாக எந்தக் கவனமும் செலுத்தப்படவில்லை என்று குழுவில் வலியுறுத்தப்பட்டது.

**குழுவின் பரிந்துரைகள்**

i. இந்த அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்ட நேரத்தில் நாட்டில் மருந்துகளுக்கு பாரிய பற்றாக்குறை இருந்ததையும், அது மருத்துவ வழங்கல் துறையின் தரவுத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளதையும் உறுதிப்படுத்தும் தொடர்புடைய ஆவணங்கள், **1 மாதத்திற்குள்** குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ii. அமைச்சரவை விஞ்ஞாபனத்தை தயாரிப்பதற்கான தகவல்களை வழங்கிய அலுவலர், அமைச்சரவை விஞ்ஞாபனத்தை தயாரித்த அலுவலர் ஆகிய விடயங்களையும் உள்ளடக்கி, அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் திட்டநுட்பத்தை உறுதிப்படுத்துவதற்கான தகவல்கள் உள்ளடங்கிய அறிக்கையொன்றை ஒரு (01) மாதத்திற்குள் குழுவுக்குச் சமர்ப்பித்தல்

**பரிந்துரையை அமுல்படுத்த வேண்டிய பொறுப்பான உத்தியோகத்தர்கள்/ நிறுவனங்கள்**

செயலாளர் - சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

பிரதி பணிப்பாளர் நாயகம் - மருத்துவ வழங்கல் பிரிவு

**07. Savorite Pharmaceuticals நிறுவனம் ஊடாக அத்தியாவசிய மருந்துகளை இறக்குமதி செய்தல்.**

30.11.2022 ஆந் திகதிய தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்ததும் அதிகாரசபையின் தலைவரிடம் உரையாற்றிய அப்போதைய சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் ஏ.டி. திரு. சுதர்ஷன கையொப்பமிட்ட கடிதத்தின்படி, இந்த அமைச்சரவைப் பத்திரத்தின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட நிறுவனத்திலிருந்து 38 வகையான மருந்துகளை இறக்குமதி செய்வதற்குத் தேவையான

நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று குழு கூட்டத்தில் தெரியவந்தது.

அதன்படி, Savorite Pharmaceuticals நிறுவனம் அதிகாரசபையில் பதிவு செய்யப்படவில்லை என்றாலும், மேற்கூறிய கடிதம் Savorite Pharmaceuticals நிறுவனத்திடம் இந்த மருந்துகள் அத்தியாவசியமானவை என்பதால், இந்த மருந்துகளை விரைவில் இறக்குமதி செய்வதற்கான WOR I வெளியிடுமாறு கேட்டுக் கொண்டதாக குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. ஜனக சந்திரகுப்தா கையொப்பமிட்டு மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைமை நிர்வாக அதிகாரிக்கு 2022.12.13 ஆந் திகதி அனுப்பிய கடிதத்தின்படி, இலங்கையில் கடுமையான மருந்துப் பற்றாக்குறையைத் தவிர்க்க Savorite Pharmaceuticals WOR வழங்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும், அமைச்சரவை இதற்கு ஒப்புதல் அளித்துள்ளதால், கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ள அத்தியாவசிய மருந்துகள் அந்த நிறுவனத்திலிருந்து 03 மாதங்களுக்கு இறக்குமதி செய்யப்பட உள்ளன. மேலும், சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவு இந்த மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான நேரடி இறக்குமதியாளராக உள்ளது. மேலும், நாட்டில் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் மருந்துப் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு இந்த WOR இலவசமாக வழங்கப்பட உள்ளது என்பதையும் குழு அவதானித்தது.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்ததும் அதிகாரசபையால் 2022.09.16 ஆந் திகதி இந்திய கடன் உதவி(Indian Credit Line), ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB), உலக வங்கி (WB) மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (Asian Infrastructure Investment Bank) ஆகியவற்றிலிருந்து

கொள்முதல்களுக்கான விரைவுப் பாதைக்கான WOR வழங்கலுக்கான அங்கீகரிக்கப்பட்ட சிறப்பு முறையின் அறிவிப்பு என்ற தலைப்பிலான சிறப்பு முறைமைக்கான சபை அங்கீகரித்தலாக 2022.09.16 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை அறிவிப்புகள், (Note to board) மேலும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் புள்ளிகளுக்கு உன்னிப்பாக கவனம் செலுத்தியது. அமைச்சரவையால் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட நடைமுறை குறித்து இயக்குநர்கள் குழுவின் தகவலுக்காக மட்டுமே என்றும், இயக்குநர்கள் குழுவிடம் இதைப் பரிந்துரைத்து சமர்ப்பிக்கும் நேரத்தில் கூட, தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைமை நிர்வாக அதிகாரி வைத்தியர் திரு. விஜித் குணசேகர அவர்களால் WOR வெளியிடுதல் தொடங்கப்பட்டது என்றும், இதற்காக இயக்குநர்கள் குழுவின் முன் ஒப்புதல் பெறப்படவில்லை அல்லது விவாதிக்கப்படவில்லை என்றும், இந்த Savorite Pharmaceuticals நிறுவனத்திற்கு WOR ஏற்கனவே வழங்கப்பட்டு, 2022 டிசம்பர் 29 ஆந் திகதி நடைபெற்ற இயக்குநர்கள் குழு கூட்டத்திற்கு அறிக்கை அளிக்கப்பட்டது என்றும், ஒப்புதல் வழங்கப்பட்ட (endorse) பிறகு இந்த ஆவணங்களைப் பெற்றதால் இயக்குநர்கள் குழு இதை அங்கீகரித்தது என்றும் தெரியவந்தது.

இந்த விஷயத்தை MEC குழுவிடம் சமர்ப்பிக்க பணிப்பாளர் சபை பரிந்துரைத்திருப்பதும், MEC பரிந்துரைகள் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் பரிந்துரைகளுடன் ஒத்துப்போகாததால், மீதமுள்ள 89 மருந்துகள் 2023.02.17 ஆந் திகதிய பணிப்பாளர் சபை

அறிக்கை மூலம் இயக்குநர்கள் குழுவிற்கு அங்கீகாரத்திற்காக பரிந்துரைக்கப்பட்டன என்பதும், பணிப்பாளர் சபை மருத்துவ வழங்கல் பிரிவு மற்றும் சுகாதார அமைச்சகத்திற்கு இது குறித்து தெரிவிக்கத் தெரிவித்திருந்ததும், ஆனால் மருத்துவ வழங்கல் பிரிவு அதிகாரிகள் ஏற்கனவே மருந்துகளைப் பெற்று அதற்கு ஒப்புதல் அளித்திருந்தனர் என்பதும் கவனிக்கப்பட்டது. சட்டத்தின்படி நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் மருந்துகளின் பாதுகாப்பு, செயல்திறன் மற்றும் தரத்தை பராமரிப்பதே இந்த நிறுவனத்தை நிறுவுவதன் நோக்கம் என்றும், இதற்கான இறுதிப் பொறுப்பு இயக்குநர்கள் குழுவிடம் உள்ளது என்றும் குழு வலியுறுத்தியது.

சட்டத்தின் பிரிவு 109 இன் படி WOR விநியோகிப்பதற்காக சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பெறுகைகள் தொடர்பான பல்வேறு நிதி நிறுவனங்களுக்கு சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பெறுகை நிறுவனங்களுக்கு மருத்துவ அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட மருந்துப் பொருட்களை வழங்குவதற்கான WOR நடைமுறை குறித்து, அதிகாரசபையின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி வைத்தியர் திரு. விஜித் குணசேகர, அமைச்சின் செயலாளருக்கு 2022 செப்டம்பர் 02 ஆந் திகதிய கடிதத்தில், ஒரு விரைவான பொறிமுறையை திட்டமிட்டுள்ளதாக குழு குறிப்பிட்டது. தொழில்நுட்பக் காரணத்தால், தலைமை நிர்வாக அதிகாரி, சம்பந்தப்பட்ட துரிதப்படுத்தப்பட்ட பொறிமுறை குறித்து அமைச்சகத்திற்குத் தெரிவிக்கவில்லை என்பதும் தெரியவந்தது.

சுகாதார அமைச்சின் செயலாளருக்கு மேலதிக செயலாளர் வைத்தியர் ரத்நாயக்க அவரின் கையொப்பத்துடன் 2022.09.02 ஆந் திகதிய குறிப்பின் பிரகாரம் சுகாதார

அமைச்சின் வேண்டுகோளின்படி 6 மாதங்களுக்குள் WOR களை வழங்குவதற்கான விரைவான வழிமுறையை நிறுவ பரிந்துரைத்துடன் அதே நாளில் (2022.09.02 ஆந் திகதி) தலைமை நிர்வாக அதிகாரி WOR களை வழங்குவதற்கான விரைவான வழிமுறையை அதிகாரசபை பின்பற்றும் என்று வெளியிட்ட அறிக்கையையும் குழு விசேட கவனம் செலுத்தியது. செயலாளருக்கு இதுபோன்ற விசேட வழியைப் பின்பற்றுவதற்கான தொழில்நுட்ப அறிவு இல்லாததால், அவர் மருந்து வழங்கல் மற்றும் ஒழுங்குமுறைப் பிரிவின் மேலதிக செயலாளர் பரிந்துரை வழங்கியிருந்தமையும் குழுவில் மேலும் வெளிப்படுத்தப்பட்டது

**08**. **<u>Special Pathway முறைமை ஊடாக மருந்துகளை இறக்குமதி செய்தல்.</u>**

WOR குழு தனது கடமைகளைச் செய்ய முடியாது என்று எந்த நேரத்திலும் தெரிவிக்கப்பட்டதா என்பதையும், இந்த முடிக்கப்படாத WOR வெளியீடு (Backlog) குறித்து இயக்குநர்கள் குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டதா என்பதையும் குழு கவனத்தில் கொண்டதுடன் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அமைச்சரிடமிருந்து எந்த உத்தரவும் பெறப்படவில்லை என்பதும் உறுதிப்படுத்தப்பட்டது. முன்னாள் சுகாதார அமைச்சர் தலைமையில் நடைபெற்ற மருந்துகள் மறுஆய்வுக் கூட்டத்தில் மருந்துகளின் தேவை உறுதிப்படுத்தப்படுவது தெரியவந்தது.

Special Pathway செயல்முறையை நிறுத்த முடிவு செய்யப்பட்ட பின்னரும், இந்த செயல்முறையைத் தொடர ஒப்புதல் கோரி வைத்தியர் திரு. விஜித் குணசேகர அமைச்சின் செயலாளருக்கு கடிதம் எழுதியதாகவும்,

செயலாளர் அங்கீகாரம் அளித்ததாகவும் தெரியவந்தது. பணிப்பாளர் சபை WOR களை வழங்குவதை நிறுத்தி வைக்க முடிவு செய்த பின்பும், மேலும் சுமார் 60 WOR கள் வழங்கப்பட்டிருப்பதும் தெரியவந்தது. நிறுவனத்தின் தலைவராக அப்போதைய தலைவர் மற்றும் அப்போதைய தலைமை நிர்வாக அதிகாரியின் நடவடிக்கைகள் குறித்து குழு தனது கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியது.

உச்ச நீதிமன்றத்தின் இடைக்காலத் தடை உத்தரவு காரணமாக, ளுயஎயழசவைந நிறுவனத்திடமிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளின் பங்கு இன்னும் சுங்கத்திலிருந்து விடுவிக்கப்படவில்லை என்றும், தாமதக் கட்டணம் செலுத்தி (demurrage) துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் குழுக் கூட்டத்தில் தெரியவந்தது. Savaorite நிறுவனம் அப்போதைய சுகாதார அமைச்சரிடம் ஒரு முன்மொழிவை சமர்ப்பித்திருந்தது, மேலும் சுகாதார அமைச்சர் திரு. கெஹெலிய ரம்புக்வெல்ல, Savaorite நிறுவனத்தை உள்ளடக்கிய அமைச்சரவைப் பத்திரத்தைத் தயாரிக்க அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தார்.

**<u>குழுவின் பரிந்துரை</u>**

பிரதான நிர்வாக உத்தியோகத்தர் தனது அதிகாரப்பூர்வ மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்தி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தை 02 வாரங்களுக்குள் குழுவிடம் சமர்ப்பித்தல்.

**<u>பரிந்துரையை அமுல்படுத்த வேண்டிய/ பொறுப்பான உத்தியோகத்தர்கள்/ நிறுவனங்கள்</u>**

செயலாளர் - சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

தலைவர் - தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை

பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்- தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை

## 09. குழுவின் தவிசாளரின் விளக்கமளித்தல்

பொது நிதி, பாராளுமன்றத்தின் இறையாண்மை அதிகாரத்தின் அடிப்படையில் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்படுவதால், இந்த விசாரணைகள் மீண்டும் தொடங்கப்பட வேண்டும் என்றும், பொது நிதியில் செய்யப்படும் செயல்பாடுகளைச் செய்வதற்கும், நாட்டு மக்களின் நலனுக்காகவும் இத்தகைய ஒழுங்குமுறை நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ளன என்றும், அந்த நிறுவனங்களை முறையாக நிர்வகிக்க பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டுள்ளன என்றும் குழுவின் தலைவர் கூறினார்.

மனித வாழ்க்கைக்கு நன்மை பயக்கும் மருந்துகள் மற்றும் வாசனை திரவியங்களை உள்ளூர் உற்பத்தி செய்து இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்குத் தேவையான ஒழுங்குமுறை பணிகளை மேற்கொள்வதற்கு இந்த நிறுவனம் பொறுப்பாகும் என்றும், 2015 இன் 5 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் மூலம் இதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

இந்த நிறுவனம் அதன் ஒழுங்குமுறைப் பங்கை முற்றிலுமாகத் தவிர்த்து, விருப்பப்படி மருந்துகளை இறக்குமதி செய்ய ஒரு நபருக்கு அதிகாரம் வழங்கியுள்ளது என்பதையும், மருந்து ஒழுங்குமுறைக்கான அதன் பொறுப்பை அது புறக்கணித்துள்ளது என்பதையும் அவர் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். WOR குழுவின் ஒப்புதல் இல்லாமல், கோரிக்கை கடிதம், WOR விண்ணப்பம், பெறுகை கட்டளை (Purchase order) மற்றும் ஒப்பந்த ஒப்பந்தம் போன்ற முதன்மை ஆவணங்களை மட்டும் ஆய்வு செய்து, மருந்துகளின் தரம், செயல்திறன் மற்றும் பாதுகாப்பு தொடர்பான எந்த அடிப்படை விவரக்குறிப்புகளையும் சரிபார்க்காமல், Special pathway முறை

மூலம் மருந்துகளை இறக்குமதி செய்ய அனுமதித்ததற்கு குழு தனது கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியது.

இந்த முழு செயல்முறையிலும் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டார், கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டிய பிரகாரம் WOR வழங்குவதில் உள்ள முறைகேடுகளை அடையாளம் காணத் தவறிவிட்டார், மேலும் எந்த வெளிப்படைத்தன்மையும் இல்லாத ஒரு செயல்முறையை அனுமதித்தார், இதன் விளைவாக தரமற்ற மருந்துகள் மற்றும் உபகரணங்கள் இறக்குமதி செய்யப்பட்டன, இதற்காக பணிப்பாளர் சபை 2022 ஆம் ஆண்டில் 224 WOR கடிதங்களையும், 2023 ஆம் ஆண்டில் 135 கடிதங்களையும் வெளியிட்டதன் மூலம் அதன் பொறுப்புகளைத் தட்டிக்கழித்துள்ளது என்றும், சுமார் ரூபா 70 பில்லியன் செலவிட்டு மிகப்பெரிய நிதி, சமூக மற்றும் சுகாதார சேதத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும், இந்த நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் பொறுப்பு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு உள்ளது என்றும் குழு வலியுறுத்தியது.

இந்த அமைச்சரவைப் பத்திரம் எந்தவித கட்டணமும் இல்லாமல் WOR களை வழங்க அறிவுறுத்தியிருந்தாலும், பணம் சேகரிப்பதன் மூலம் நிதி மோசடியும் நடந்துள்ளதாகத் தெரிகிறது என்றும், இதுபோன்ற நடைமுறைகள் மீண்டும் நிகழாமல் இருப்பதை நிறுவனம் உறுதி செய்ய வேண்டும் என்றும் குழு வலியுறுத்தியது.

இந்த மருந்துப் பொருட்களின் தேவையைத் தீர்மானிப்பதற்காக பணிப்பாளர் சபை கூட்டங்களில் திறைசேரி பிரதிநிதி வைத்தியர் திரு. பிரதீப் குமாரசிங்க த சில்வா மற்றும் வைத்தியர் திரு. கோசல கருணாரத்ன ஆகியோர் பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது தெரிவித்திருந்தமை தொடர்புடைய கூட்ட குறிப்புக்களில்

உள்ளதாகவும், அவர்கள் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக பொறுப்புடன் செயல்பட்டதாகவும் மேலும் கூறப்பட்டது.

இந்த நிறுவனத்தில் நல்லாட்சி கொள்கைகளில் சிக்கல் இருப்பதாகவும், பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் பணிப்பாளர் சபையை பிரதிநிதித்துவப் படுத்துதல் சிக்கலுக்குரியது என்றும், பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் இந்தத் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி வலியுறுத்தினார்.

தொலைபேசி Telephone: 011 2698507, 011 2694033, 011 2675449, 011 2675280

தொலைநகல் Fax: 011 2693866, 011 2693869, 011 2692913

மின்னஞ்சல் e-mail: postmaster@health.gov.lk

இணையத்தளம் Website: www.health.gov.lk


සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

எனது இல My No.: HH/AD/61/04/41/2022

உமது இல Your No.: (49)

திகதி Date: 2022-10-25.

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
MINISTRY OF HEALTH

---

**அமைச்சரவை விஞ்ஞாபனம்**

**இலங்கையில் தொடர்ச்சியான மருத்துவ சேவையை பராமரித்தல்**

**1.0 பின்னணி:**

1.1 இலங்கையில் சுகாதார நிறுவனங்களுக்கு மருந்துகள் மற்றும் நுகர்வுப் பொருட்களை கொள்வனவு செய்தல், விநியோகித்தல், ஒழுங்குபடுத்தல் மற்றும் அவற்றின் தரத்தை நோயாளர்கள் வரை சிறந்த முறையில் கொண்டு சென்று வழங்கப்படுவதைக் கண்காணிப்பதற்கான முழுப்பொறுப்பும், சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களான மருத்துவ விநியோகப் பிரிவு, இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபை ஆகியவற்றுக்கு உள்ளது.

1.2 இலங்கையில் சுகாதார சேவைகளுக்குத் தேவையான மருந்துகள், சத்திர சிகிச்சைப் பொருட்கள், ஆய்வுகூட உபகரணங்கள், கதிரியக்க உபகரணங்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள் (மருத்துவ விநியோகம்) ஆகியவற்றை வழங்குவதற்காக இலங்கை அரசாங்கம் வருடாந்தம் சுமார் 65 பில்லியன் ரூபாவை செலவிடுகின்றது. தற்போது நிலவும் அந்நியச் செலாவணி நெருக்கடியானது, நாட்டில் மருத்துவப் பொருட்களுக்கான பற்றாக் குறையை உருவாக்கி மருத்துவ விநியோகச் சங்கிலியை மோசமாக பாதித்துள்ளது.

1.3 இந்த நோக்கத்திற்காக, சுகாதார அமைச்சினால் இந்தியக் கடன் திட்டம், ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி, உலக வங்கி நிதிகள் மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி நிதிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி தேவையான மருத்துவப் பொருட்களைப் பெறுவதற்காக பல கடன் திட்டங்களையும் நன்கொடை நிறுவனங்களையும், ஒருங்கிணைப்பதற்கு சாத்தியமான அனைத்து முயற்சிகளும், தேவையான நடவடிக்கைகளும் அமைச்சினால் எடுத்துள்ளது.



385, Suwasiripaya, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha, Colombo 10, Sri Lanka.

CamScanner

02. விபரம் மற்றும் நியாயப்படுத்தல் :

2.1 மருத்துவப் பொருட்களுக்கான அரசாங்கத்தின் முக்கிய கொள்முதல் நிறுவனம் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனமாகும். அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் மருத்துவப் பொருட்களை கொள்வனவு செய்தல் மற்றும் மருத்துவப் பொருட்களை இறக்குமதி செய்வது தொடர்பான நிர்வாகச் செயற்பாடுகளுக்கு கணிசமான காலம் எடுக்கின்றது.

2.2 மருத்துவ விநியோகப் பிரிவில் மருத்துவப் பொருட்களின் தற்போதைய இருப்பு அளவு மிகவும் குறைவான மட்டத்தில் உள்ளது. தற்போது (2022 ஒக்டோபர் 17 நிலவரப்படி) மருத்துவ விநியோகப் பிரிவில் 151 மருந்துகள், 5278 சத்திர சிகிச்சைப் பொருட்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள், 18 கதிரியக்க உபகரணங்கள் மற்றும் 850 அத்தியவசிய ஆய்வுகூட உபகரணங்களின் இருப்பு பூஜ்ஜியமாக உள்ளன. அடுத்த 3 வாரங்களில் இன்னும் பல உபகரணங்களின் இருப்பு நிறைவடையக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2.3 மேலும் 21 மருந்துகள் மற்றும் 2002 சத்திர சிகிச்சைப் பொருட்கள் மற்றும் நுகர்வுப் பொருட்களின் வைத்தியசாலை (நிறுவன) இருப்பு நிலைகள் ஏற்கனவே பூஜ்ஜியத்தில் உள்ளன. இதன் காரணமாக அடுத்த 3 வாரங்களில் நாட்டின் சுகாதார நிறுவனங்களில் மருத்துவப் பொருட்களுக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது. (தட்டுப்பாடான பொருட்களின் முழு விபரங்கள் இணைப்பு 1 என இணைக்கப்பட்டுள்ளது)

2.4 அறுவை சிகிச்சைகளுக்கான தையல் பொருட்கள் மற்றும் மயக்க மருந்துகள் போன்ற அத்தியாவசிய சத்திர சிகிச்சை உபகரணங்களின் இருப்புகள் தீர்ந்துவிட்டன மற்றும் மிகக்குறைந்த அளவில் இருத்தல், அடுத்த 3 வாரங்களில் சித்திர சிகிச்சை கூடங்களின் செயற்பாடு முற்றிலும் முடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.(இணைப்பு 2)

2.5 தற்போது அந்நியச் செலாவணி நெருக்கடியில் தேவையான மருத்துவ விநியோகப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக சுகாதார அமைச்சினால் முதன்மை ஆதாரமாக இந்தியக் கடன் நிதியை பயன்படுத்துகிறது. மருத்துவப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு ஒதுக்கப்பட்ட 114.9 மில்லியன் அமெரிக்க டொலர்களில் 68.5 மில்லியன் அமெரிக்க டொலர்களே மேற்படி கூட்டுத்தாபனத்தினால் பயன்படுத்தப்பட்டுள்ளன. (2022 செப்டம்பர் 14 வரையில் மருத்துவப் பொருட்களுக்காக இந்தியக் கடன் திட்டத்தை பயன்படுத்தியமை தொடர்பான முழுமையான விபரங்கள் இணைப்பு 3 என இணைக்கப்பட்டுள்ளது.)

2.6 இந்தியக் கடன் முன்மொழிவுத் திட்டம் மற்றும் பிற நிதிகளைப் பயன்படுத்தி 45 நாட்களுக்குள் இலங்கைக்கு 03 மாத காலத்திற்குப் போதுமான மருத்துவப் பொருட்களை வழங்குவதற்கு The Savorite Pharmaceuticals (Pvt) Ltd (703, Atlantis Heights, Sarabhai Compound, Vadiwadi Road, Vadodara- 39007 Gujarat, India.) நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது. (இணைப்பு 4)



CS CamScanner

(30)

(44)

2.7 தற்போதைய அந்நியச் செலாவணி நெருக்கடியில், தேவையான மருத்துவப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு சுகாதார அமைச்சினால் இந்தியக் கடன் திட்டத்தை முதன்மையாகப் பயன்படுத்தியது. அதன்கீழ் நிதி அமைச்சின் இந்திய கடன் வசதி ஒருங்கிணைப்புப் பிரிவு (ICFC) மற்றும் இந்திய உயர் ஸ்தானியர் அலுவலகத்தின் நிர்வாக மற்றும் ஒப்புதல் பெறுவதற்கான செயல்முறைக்காக இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோவைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், தேவையான ஒப்புதலைப் பெறுவதற்கு நீண்ட காலம் எடுப்பது அவதானிக்கப்பட்டது. எனவே, சுகாதாரத் துறைக்கான அத்தியவசிய மருந்துகள், சத்திரசிகிச்சை நுகர்வுப் பொருட்கள் (Surgical items) மற்றும் வினைத்திறன்களை(reagents) துரிதமாக வழங்குவதில் பாரிய சிக்கல்கள் எழுந்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

### 3.0 பரிந்துரைக்கப்பட்ட தீர்வு

3.1 மருத்துவ விநியோகப் பிரிவின் அவசர நிலைமை மற்றும் தீவிரத் தேவையின் அடிப்படையில், இந்திய கடன் முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் மீதமுள்ள நிதி மற்றும் ஏனைய நிதிகளைப் பயன்படுத்தி 3 மாத காலத்திற்குப் போதுமான மருத்துவப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு The Savorite Pharmaceuticals (Pvt) Ltd போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட தனியார் துறையின் இறக்குமதி செய்யும் அல்லது உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குதல்.

3.2 இந்திய கடன் திட்டம் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதி உட்பட பிற நிதி முறைகளைப் பயன்படுத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோகத்தர்களுடன் ஒப்புக்கொள்ளப்பட்ட காலத்திற்குள் இறக்குமதி செய்யப்பட்ட தொகைக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்.

3.3 இந்த நெருக்கடியான காலத்தில் ஏற்படும் தாமதங்களைக் குறைப்பதற்காக, ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்யப்படாத பொருட்கள் இறக்குமதி செய்வதற்கு முன் மேற்படி கூட்டுத்தாபனத்தில் முறையான பதிவு செயல்முறைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

### 4.0 எதிர்பார்க்கப்படும் அனுமதி

4.1 அரச சுகாதார நிறுவனங்களில் காணப்படும் கடுமையான மருத்துவப் பற்றாக் குறையை தவிர்த்து தொடர்ச்சியாக மருத்துவ விநியோகச் சேவையைப் பேணுவதற்கு சுகாதார அமைச்சினால் பின்வரும் முன்மொழிவுகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தை எதிர்பார்க்கிறது.

4.1.1 மருத்துவ விநியோகப் பிரிவின் அவசரத் தேவையின் அடிப்படையில் இந்தியக் கடன் முன்மொழிவு திட்டத்தின் கீழ் மீதமுள்ள நிதி மற்றும் ஏனைய நிதிகளைப் பயன்படுத்தி மூன்று மாத காலத்திற்குப் போதுமான அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு The Savorite Pharmaceuticals (Pvt) Ltd நிறுவனத்திற்கு மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிற விநியோகத்தர்களுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கு.



CS CamScanner

4.1.2 இந்திய கடன் திட்டம் மற்றும் ஏனைய நிதியைப் பயன்படுத்தி, ஒப்புக்கொள்ளப்பட்ட கட்டணத் திட்டத்திற்கு அமைய கொடுப்பனவுகள் செலுத்துவதற்காக The Savorite Pharmaceuticals (Pvt) Ltd நிறுவனம் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிற விநியோகத்தர்களுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு அங்கீகாரம் வழங்குவதற்கு.

Dr. Keheliya Rambukwella
Minister of Health

கலாநிதி கெஹெலிய ரம்புக்வெல்ல
சுகாதார அமைச்சர்

2022 ஒக்டோபர் மாதம் 25 திகதி

Page 4 of 4

CS CamScanner